ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு
விடிந்தது முடிந்தது விழிகள் யாவும் விரிந்தது
எழுக எழுக தமிழர் தேசம் அழுத வாழ்வு பறந்தது
கலிங்கத்துப்பரணியை எழுதிய புலவனை கைதட்டி கூப்பிடுங்கள்
புதியதோர் பரணியை எழுதிடச் சொல்லியே புலவனை கூப்பிடுங்கள்

ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு

உப்பக்கடலே உப்புக்கடலே உன்னை பார்த்த சந்தோசம்
ஊரும் உறவும் சேரும் பொழுதில் உள்ளத்துள்ளே சங்கீதம்
இப்போதெங்கள் ஆனையிறவில் சேரும் போதில் சந்தோசம்
இனிமேல் எங்கள் தமிழீழத்தில் என்று போதும் அன்பாரம் *2*

ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு

உருக்குள்ளே போகச் செய்த ஓயாத அலையினன் நன்றி
உதையம் காண செய்த எங்கள் தலைவா உனக்கு நன்றி
வீசும் காற்றே வீசும் காற்றே ஊருக்குள்ளே செல்லு *2*
விரைவில் நீ ஆனையிறவாலே ஏறி வருவோம் என்றே சொல்லு *2*

ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு

ஆடும் பனையும் ஆடும் மலையும் நலமா எங்கள் மண்ணே
ஆனையிறவில் கோலம் போட சாறல் வா பெண்ணே
இது நாள் வரையும் உயிராய் இருந்து எமையாதரித்த உறவே
இனிமேல் உம்மை மறவோம் மறவோம் எங்கே தான் என் உயிரே *2*

ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு

நாவற்குழியில் பாலத்தேறி பூவாய் எங்கள் வாயே
நாளை உந்தன் வாசல் முழுதும் நாதஸ் வரமே தாயே
ஆனையிறவின் மேல் ஏறி நின்று ஆடா எங்கள் முகிலே *2*
ஆடடா வெற்றி அடைந்தோம் என்று பாடாய் எங்கள் குயிலே *2*

ஆனையிறவில் மேனி தடவி போனது போனது பூங்காற்று
அதன்மேல் ஏறி ஓயாதஅலையில் புலிகள் போயினர் அடநேற்ரு